செய்தி வெளியீடு எண்: 556 27– 8–2007

## பழனி கோவில் கம்பி வட ஊர்தி விபத்து
## முதலமைச்சர் கலைஞர் வேதனை

## உயிரிழந்தோருக்கு தலா ரூ.2 இலட்சம் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 26.8.2007 அன்று நேர்ந்த கம்பி வட ஊர்தி விபத்து காரணமாக நான்கு பேர் உயிரிழந்து, இருவர் காயமடைந்துள்ள செய்தியறிந்து பெரிதும் வேதனையடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சம்பவ இடத்திற்கு தமிழக அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஆணையர் திரு.பிச்சாண்டி, இ.ஆ.ப., அறங்காவலர் குழுத் தலைவர் திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம் ஆகியோரை உடனடியாக அனுப்பியதுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு இலட்ச ரூபாய் வீதமும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதமும் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும், இந்த விபத்து குறித்து ஆய்வு செய்வதற்கு வல்லுநர் குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும், அக்குழு வழங்கும் அறிக்கையின் அடிப்படையில் அரசு மேல்நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.